நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## முல்லைப் பெரியாறு: ஆனந்த் குழு பதவிக் காலம் 2 மாதம் நீட்டிப்பு

First Published : 28 Feb 2012 01:35:47 AM IST



புதுதில்லி, பிப். 27: முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு செய்து வரும் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பதவிக் காலத்தை ஏப்ரல் 30-ம் தேதி வரை உச்ச நீதிமன்றம் நீட்டித்துள்ளது. இந்த விவகாரத்தில் இரு மாநில அரசுகள் ஆனந்த் குழுவுக்கு ஒத்துழைக்காமல் இருப்பது அதிருப்தி அளிக்கிறது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகள் டி.கே. ஜெயின், ஆர்.எம். லோதா, தீபக் வர்மா, சி.கே. பிரசாத், அனில் ஆர். தவே ஆகிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு, முல்லைப்பெரியாறு அணை தொடர்பாக நீதிபதி ஆனந்த் குழு அனுப்பிய கடிதத்தை திங்கள்கிழமை பரிசீலித்தது.

தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்குரைஞர்கள் பி.ஏ.பாப்டே, உமாபதி ஆகியோரும் கேரளம் சார்பில் மூத்த வழக்குரைஞர் வி. கிரியும் ஆஜரானார்கள்.

**ஆனந்த் குழு அனுப்பிய கடித விவரம்:** அணை தொடர்பான ஆய்வுப் பணிகளுக்கு தமிழ்நாடு, கேரள மாநில அரசுகள் முழுமையான ஒத்துழைப்பு அளிக்கவில்லை. அணைப் பகுதியில் நிபுணர் குழு துளையிட்டு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள இரு மாநில அரசுகளும் அனுமதி வழங்குவதில் தாமதம் காட்டின. அதனால்தான் குறிப்பிட்ட காலத்துக்குள் எங்களது ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்க இயலாத நிலை ஏற்பட்டது.

நிபுணர் குழு ஆய்வு செய்த பிறகுதான், எங்களது குழுவின் விசாரணை நிலவர அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். அதற்கு வசதியாக பிப்ரவரி 29-ம் தேதியுடன் முடிவடையவுள்ள எங்களது குழுவின் பதவிக் காலத்தை நீட்டிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடித விவரங்களை நீதிபதி டி.கே.ஜெயின் தெரிவித்தார். பின்னர் ஆனந்த குழு தொடர்பாக உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு பிறப்பித்த உத்தரவு வருமாறு:

""இரு மாநில நீர் ஆதாரம் தொடர்புடைய இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அரசுகள் ஆனந்த் குழுவுக்கு ஒத்துழைக்காமல் இருப்பது அதிருப்தி அளிக்கிறது. இதுபோன்று மாநில அரசுகள் செயல்படுவது வருந்தத்தக்கது.

அணையின் பாதுகாப்பு உள்ளிட்ட ஆய்வுப் பணிகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்தால்தான் ஆனந்த் குழுவும் உரிய காலத்தில் அறிக்கை அளிக்க முடியும். அதன் பிறகுதான் இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றமும் ஒரு முடிவை எடுக்க முடியும்.

அதனால், சம்பந்தப்பட்ட தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநில அரசுகள் ஆனந்த் குழுவுக்கும் அணைப் பகுதியில் ஆய்வு செய்து வரும் நிபுணர் குழுவுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

துளையிடும் பணிகளை ஆய்வு செய்து வரும் குழுவினர் மார்ச் 30-ம் தேதிக்குள் தமது அறிக்கையை ஆனந்த் குழுவிடம் அளிக்க வேண்டும். அதன் பிறகு தமது ஆய்வை இறுதி செய்து ஆனந்த் குழு உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

இதற்கு வசதியாக, பிப்ரவரி 29-ம் தேதியுடன் முடிவடையும் ஆனந்த் குழுவின் பதவிக் காலம் ஏப்ரல் 30-ம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது" என்று அரசியல் சாசன அமர்வு தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து அணை விவகாரம் தொடர்பான அடுத்த கட்ட விசாரணையை மே 4-ம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

முல்லைப் பெரியாறு அணைப் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக நீதிபதி ஆனந்த் குழுவை உச்ச நீதிமன்றம் 2010 பிப்ரவரி மாதம் நியமித்தது.

அக்குழுவில் நீதிபதி ஆனந்த் தவிர, தமிழ்நாடு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.ஆர். லட்சுமணன், கேரளம் சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி. தாமஸ், மத்திய நீர்வளத் துறை முன்னாள் செயலர் சி.டி. தட்டே, மத்திய நீர்வள முன்னாள் தலைமைப் பொறியாளர் டி.கே. மேத்தா இடம்பெற்றுள்ளனர்.

2010 ஏப்ரல் முதல் முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்புத் தொடர்பாக இந்தக் குழு ஆய்வு செய்து வருகிறது.

ஆறு மாதங்களுக்குள் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என ஆனந்த் குழுவை உச்ச நீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

ஆனால், குறித்த காலத்தில் ஆய்வுப்பணி முடிவடையவில்லை. இதனால் தமது பதவிக்காலத்தை நீட்டிக்குமாறு ஆனந்த் குழு உச்ச நீதிமன்றத்தைக் கோரியது. இதன்படி, மூன்று முறை நீட்டிக்கப்பட்ட ஆனந்த் குழுவின் பதவிக்காலம் தற்போது நான்காவது முறையாக நீட்டிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

**சென்னையில் சர்வதேச கடலுணவு கண்காட்சி**

First Published : 28 Feb 2012 12:45:03 AM IST

சென்னை, பிப்.27: சென்னையில் 18-வது இந்திய சர்வதேச கடலுணவு கண்காட்சி புதன்கிழமை தொடங்குகிறது. மார்ச் 2-ம் தேதி வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் இக்கண்காட்சி நடைபெறும். இக்கண்காட்சியை ஆளுநர் கே. ரோசய்யா தொடங்கி வைக்கிறார். இவ்விழாவில் தமிழக மீனளத்துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் சிறப்புரை ஆற்ற உள்ளதாக கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (எம்பிஇடிஏ) தலைவர் லீனா நாயர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 168 நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்றன. இப்போது அதைவிட அதிகமாக 210 நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. கடலுணவு ஏற்றுமதியாளர்கள், பதப்படுத்துவோர், இதை வாங்குவோர் மற்றும் இத்துறை சார்ந்த நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றன. இந்தியா மட்டுமின்றி ஜெர்மனி, ஜப்பான், டென்மார்க், வியத்நாம், ஸ்பெயின், தைவான், மலேசியா, ஆர்ஜென்டீனா, அமெரிக்கா, சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களும் இக்கண்காட்சியில் கலந்து கொள்கின்றன. இது தவிர, ஜப்பான், நெதர்லாந்து, சீனா, ஸ்பெயின், ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி, லெபனான், பிரான்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1,100 பிரதிநிதிகள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றனர்.

முதல் இரண்டு தினங்களில் தொழில்நுட்பக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடலுணவு ஏற்றுமதியில் கடந்த சில ஆண்டுகளாக இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டி வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் இந்திய ஏற்றுமதி 350 கோடி டாலருக்கும் அதிகமாகும்.

இந்தியாவிலிருந்து 100 நாடுகளுக்கு கடலுணவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் பெரும்பாலும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

## நதி நீர் இணைப்பு திட்டம்: உச்சநீதிமன்றம் உத்தரவு

First Published : 27 Feb 2012 02:46:08 PM IST

புதுடெல்லி, பிப்.27: நதி நீர் இணைப்பு திட்டத்திற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கியள்ளது.இது தொடர்பான மனு இன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் நதி நீர் இணைப்பு திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளனர். மேலும் திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் செயல்படுத்தவும் உத்தரவிட்டுள்ளனர். அதே நேரத்தில் இதை கண்காணிக்க உயர்மட்ட குழு ஒன்றை அமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. நதி நீர் இணைப்பு விவகாரத்தில் மத்திய மாநில அரசுகள் முழு மனதுடன் செயல்பட வேண்டும் என்றும் மனு மீதான உத்தரவில் உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க நூறு சதவீத மானியம் பெற அழைப்பு

First Published : 27 Feb 2012 11:42:56 AM IST

போடி, பிப். 26: சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க, அரசு வழங்கும் 100 சதவீத மானியம் பெறும் முறைகள் குறித்து, போடி தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் வே. கெர்சோன் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் முன்னோடிகளாக உள்ளனர்.

வாழை, தென்னை, மா, சப்போட்டா, பப்பாளி, கொய்யா, முந்திரி, கோகோ, காய்கறிகள், பூக்கள் போன்ற பயிர்களுக்கு, அதிக அளவில் சொட்டுப் நீர் பாசனம் அமைத்து 75 சதவீத மானியம் பெற்று வந்தனர்.

மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவும், நிலத்தடி நீரின் அளவைக் கூட்டவும், தண்ணீரைச் சிக்கனமாக பயிருக்குத் தேவையான அளவு மட்டும் பயன்படுத்தவும், உரத் தேவையை சொட்டுநீர்ப் பாசனம் மூலம் பயிருக்கு வழங்கி உரமிடும் செலவு, நீர் பாசன செலவு, களை எடுக்கும் செலவு ஆகியவற்றைக் குறைக்கவும், தமிழ்நாடு அரசு நீண்டகால நன்மை தரும் திட்டமாகிய, நுண்ணீர் பாசன பயன்பாட்டை அதிகரிக்க மானியத்தை சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

சிறு விவசாயிகள் 5 ஏக்கர் வரையிலும், குறு விவசாயிகள் 2.5 ஏக்கர் வரையிலும் மானியம் பெறலாம். சிறு, குறு விவசாயிகள் 100 சதவீத மானியம் பெறவும், இதர விவசாயிகள் 75 சதவீத

மானியம் பெறவும் தங்கள் பகுதி வட்டாட்சியர் பதவிக்கு குறைவில்லாத வருவாய்த்துறை அலுவலரிடம் சான்று பெற வேண்டும்.
சமீபத்தில் பெற்ற கம்ப்யூட்டர் சிட்டா, நடப்பு ஆண்டுக்கான அடங்கல், வயல் வரைபடம், குத்தகை நிலமாக இருப்பின் 10 ஆண்டுகளுக்கு பதிவு செய்யப்பட்ட பத்திர நகல், போதிய நீர்பாசன வசதியுடன் மோட்டார் வசதி, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் 3, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் வழங்கிய சொட்டுநீர்ப் பாசன செலவிற்கான பட்டியல் ஆகியவற்றுடன், தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி விண்ணப்பிக்கலாம்.
முழுமையான விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, வரிசைப்படி மானியம் வழங்கப்படும், பெண்கள், முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மொத்த நிதி ஒதுக்கீட்டில் 16 சதவீதம் ஆதிதிராவிடர், 8 சதவீதம் பழங்குடியினர் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.
இதுகுறித்து விரிவான விவரங்களைப் பெற, கீழ்கண்ட வருவாய் கிராம மக்கள் உதவி வேளாண்மை அலுவலர்களை கீழ்கண்ட செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம். மேலச்சொக்கநாதபுரம், மீனாட்சிபுரம், மேற்குமலை- மு.விவேகானந்தன்- 9865703662, அம்மாபட்டி, உப்புக்கோட்டை, வடக்குமலை, டொம்புச்சேரி- ப.மணியப்பன்-9842309954, ராசிங்காபுரம், சிலமலை, கூழையனூர், கொட்டகுடி-த.ராமகிருஷ்ணன்-9894895986, பூதிப்புரம், கோடாங்கிபட்டி, போடி, அகமலை-வே.காமராஜ்-9865436415

## வடகாட்டில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

First Published : 27 Feb 2012 02:22:35 PM IST

ஆலங்குடி, பிப். 26: ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அண்மையில் திறக்கப்பட்டது.
வடகாடு மாரியம்மன் கோயிலில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தின் திறப்பு விழாவுக்கு ஊராட்சித் தலைவர் என். கனகராஜ் தலைமை வகித்தார்.
ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் டி. பழனிச்சாமி, ஒன்றியக் குழு உறுப்பினர் சி. சீனிவாசன், ஊராட்சித் துணைத் தலைவர் சி. சாத்தையா, முன்னாள் துணைத் தலைவர் டி. தங்கவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் துரை தனசேகரன், நெல் கொள்முதல் மையத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

விழாவில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகத்தின் அலுவலர் ஆர். மணிமாறன், ஆவணக் காப்பாளர் தேவராஜ், நிலையப் பட்டியல் எழுத்தர் திருமுருகன், ஊராட்சி உறுப்பினர்கள், கோயில் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**கரும்பு சாகுபடி குறித்த கருத்தரங்கம்**

First Published : 27 Feb 2012 12:27:38 PM IST

அரவக்குறிச்சி, பிப். 26: கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் கரும்பு கருத்தரங்க கூட்டம் அண்மையில் நடைபெற்றது.
புகழூர் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் சார்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரவக்குறிச்சி, சின்ன தாராபுரம் கரும்பு விவசாயிகள் பங்கேற்றனர். கருத்தரங்க கூட்டத்துக்கு ஆலையின் பொது மேலாளர் கே.ஜி. கந்தசாமி அறிவுரையின்படி, கரூர் மண்டல பொறுப்பாளர் கே. சிக்கண்ணன் தலைமை வகித்து பேசியது:
ஆலையின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், அதிக அளவு கரும்பு தேவைப்படுகிறது. எனவே, விவசாயிகள் அதிகளவில் கரும்பு பயிரிட முன்வர வேண்டும் என்றார்.
சொட்டுநீர் பாசன மேலாளர் ரமேஷ், கரும்பு ஆராய்ச்சியாளர் முனைவர் எஸ். ராஜேஸ்வரி, பூச்சியியல் துறை ஆராய்ச்சியாளர் முனைவர் எம். திருமலை,
இயந்திர அறுவடை மேலாளர் அண்ணா அரசு ஆகியோர் தங்களின் துறைகளில் உள்ள நிறைகளை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளும் விதம் குறித்து எடுத்துக் கூறினர்.
கரூர் கோட்ட அலுவலர் சசிகலா, கரும்பு அறுவடை பகுதி அலுவலர் ஏ. சேவியர்தாஸ், சின்ன தாராபுரம் கரும்பு நடவு அலுவலர் ரகுவரன், அறுவடை அலுவலர் மாரியப்பன், மற்றும் கரும்பு நடவு அலுவலர் கலைச்செல்வன், முருகவேல், மற்றும் அரவக்குறிச்சி சின்னதாராபும் பகுதியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். அரவக்குறிச்சி கோட்ட அலுவலர் சிக்கந்தர் பாட்ஷா வரவேற்றார். நிறைவில், விவசாய பயிற்சி அலுவலர் சந்திரகலா நன்றி கூறினார்.

**"விதையின் தரம் முக்கியம்'**

First Published : 27 Feb 2012 12:26:05 PM IST

கரூர், பிப். 26: விதைகளின் தரத்தை விதைப்பதற்கு முன்பே தெரிந்து கொள்ள வேண்டும் என்று கோவை விதைச் சான்று இயக்குநரக இணை இயக்குநர் தங்கராஜ் தெரிவித்தார்.

கரூர் காந்திகிராமம், திண்ணப்பா நகரில் செயல்பட்டு வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் கோவை விதைச் சான்று இயக்குநரக இணை இயக்குநர் தங்கராஜ் அண்மையில் ஆய்வு செய்தார். ஆய்வகத்தின் விதை மாதிரி வகைகள் வாரியாக இலக்கு மற்றும் சாதனை விவரங்களையும், ஆய்வகத்தில் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறைகளையும், ஆய்வகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளையும் ஆய்வு செய்தார். விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் உடனுக்குடன் மாதிரிகள் கொடுத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதையும் அவர் பார்வையிட்டார்.

அப்போது அவர் தெரிவித்தது:

கரூர் மாவட்ட விவசாயிகள் தங்கள் வசம் விதைப்புக்காக வைத்துள்ள விதைகளின் தரத்தை விதைப்பதற்கு முன்பே தெரிந்து கொள்வது அவசியமாகும். எனவே, தங்களிடம் உள்ள விதை குவியலில் இருந்து 100 கிராம் மாதிரி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வெள்ளை தாளில் பயிரின் ரகம், குவியல் எண் மற்றும் தங்களது முழுமையான அஞ்சல் முகவரி ஆகியவற்றை எழுதி மேலும் ஆய்வு கட்டணமாக மாதிரி ஒன்றுக்கு 30 ரூபாயுடன் மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் என்ற முகவரியில் ஒப்படைத்து ஆய்வு முடிவை பெற்று பயன்பெறலாம் என்றார் அவர். ஆய்வின் போது, விதைப் பரிசோதனை அலுவலர்கள் வெங்கட்ராமன், எழில்அரசு உள்ளிட்டோர் உடனிருந்தார்.

## 64 வகை பழ மரக்கன்றுகள் நடும் விழா

First Published : 27 Feb 2012 11:20:15 AM IST

கோத்தகிரி, பிப். 26: முதல்வர் ஜெயலலிதாவின் 64வது பிறந்த தினத்தையொட்டி கோத்தகிரியில் வடக்கு வனக்கோட்டம் சார்பில் 64 வகையிலான பழ மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட வடக்கு வனக்கோட்ட அலுவலரின் உத்தரவின் பேரில் கட்டபெட்டு வனசரகத்திற்குட்பட்ட கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் தொழிற்சாலை வளாகங்கள், சாலையோரங்கள், தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்திற்குட்பட்ட கிராமம் போன்ற பகுதிகளில் மா, பலா, நாவல், விக்கி உள்ளிட்ட மரக்கன்றுகளும், செண்பகம், ஸ்பெத்தோடியா போன்ற பூ மரக்கன்றுகளும், மகாக்கனி, கிளிஞ்சி போன்ற இயற்கை சோலை மரக்கன்றுகள் உட்பட 64 வகையான மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

கூக்கல் மற்றும் கூக்கல்தொரை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கட்டபெட்டு வனசரக அலுவலர் எல்.பெள்ளு தலைமை தாங்கினார். வனவர் கேசவன், சீமோன்,

வனக்காப்பாளர் விக்ரம் உட்பட்ட வனத்துறை ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதே போல் கீழ்கோத்தகிரி வனச்சரகத்தில் தேசிய காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்ற மரம் நடும் விழாவிற்கு கீழ்கோத்தகிரி வனசரகர் வித்யாதரன் தலைமை வகித்தார். கீழ்கோத்தகிரி, சோலூர்மட்டம், தேனாடு ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளி வளாகம், வீடுகள் ஆகிய இடங்களில் பழ மரக்கன்றுகள், சோலை மரக்கன்றுகள், பூ மரங்கள் என 2000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

மேலும் கொய்யா, எலுமிச்சை, மா, ஆரஞ்சு, பலா ஆகிய பழ மரக்கன்றுகளை பொதுமக்கள் தங்கள் வீடுகளில் நடவு செய்திட அதிகம் விரும்பி வாங்கி சென்றனர். இந்நிகழ்ச்சியில் வனவர் குணசேகரன், வனக்காப்பாளர்கள் ராஜ்குமார், நந்தீஸ் உட்பட வனத்துறை ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**மக்காச்சோளத்தை சேமித்து வைக்க அறிவுரை**

First Published : 27 Feb 2012 01:34:13 PM IST

திருவண்ணாமலை, பிப். 26: ஏப்ரல் மாதம் வரை மக்காச்சோளம் விலையில் மாற்றம் ஏற்படாது என்பதால், அதை சேமித்து வைக்குமாறு விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து, திருவண்ணாமலை மாவட்ட வேளாண் வணிகத் துணை இயக்குநர் மா. சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இம் மாத இறுதியில் தமிழ்நாட்டில் மக்காச்சோள வரத்து அதிகம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய மக்காச்சோளத்தை கோழிப்பண்ணை நிறுவனங்கள் வரும் மாதத் தேவைக்காக இருப்பில் வைக்க கொள்முதல் செய்வர். எனவே, விலை பெரிதாகக் குறைய வாய்ப்பில்லை.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 15 ஆண்டு உடுமலை சந்தையில் நிலவிய மக்காச்சோள விலைகளை ஆய்வு செய்தது.

அதன் முடிவுகளின்படி ஏப்ரல் 2012 வரை மக்காச்சோள விலை குவிண்டாலுக்கு ரூ.1050 முதல் ரூ.1100 ஆக இருக்கும் என்றும், 2012 ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு குவிண்டாலுக்கு ரூ.1200க்கு மேல் விலை அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. எனவே, சேமிக்க வசதியுள்ள விவசாயிகள் மக்காச்சோளத்தை ஏப்ரல் வரை சேமித்து வைக்க சிபாரிசு செய்யப்படுகிறது  என்று அவர் தெரிவித்துள்ளார்.

100% மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம்: ஆட்சியர்

First Published : 27 Feb 2012 01:35:03 PM IST

திருவண்ணாமலை, பிப். 26: நூறு சதவீத மானியத்தில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துப் பயன்பெறுமாறு  திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளை ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: குறைந்த அளவு நீரைக்கொண்டு அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்யவும், களைகளைக் கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறவும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சொட்டுநீர்ப் பாசனம் உதவுகிறது. இந்த சொட்டு நீர்ப்பாசன அமைப்பு ஏற்படுத்த சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், மற்ற விவசாயிகள் 75 சதவீத மானியமும் அளிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

குத்தகைக்குச் சாகுபடி செய்யும் விவசாயிகள், 10 ஆண்டுக்கு குறையாமல் குத்தகைப் பத்திரம் பதிவு செய்திருந்தால் இத் திட்டத்தில் பயன்பெறலாம். இத் திட்டம் மூலம் ஒரு விவசாயி அதிகபட்சம் ரூ.43,816 மதிப்பிலான சொட்டு நீர்ப் பாசனக் கருவிகளை முழு மானியத்தில் பெறலாம்.

நெருக்கமாக நடவு செய்யப்படும் பயிர்களுக்கு 1 ஏக்கர் வரையும், நீண்ட இடைவெளிப் பயிர்களான மா, சப்போட்டா, தென்னை போன்றவற்றுக்கு 5 ஏக்கர் வரையும் சொட்டு நீர்ப் பாசனம் அமைத்துப் பயன்பெறலாம். நீரேற்று இயந்திரம் (மின் பம்புசெட்) மற்றும் போதிய அளவு கிணற்று நீர் வசதி உடைய அனைத்து விவசாயிகளும் இத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். வேளாண் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநரிடமும், கரும்பு பயிருக்கு கரும்பு அலுவலரிடமும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பெண்கள், மாற்றுத் திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் விவசாயிகளுக்கு இத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இத் திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் அமைக்க 20 சொட்டு நீர்ப் பாசனக் கம்பெனிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில், விவசாயிகள் விரும்பும் நிறுவனம் மூலம் சொட்டுநீர்ப் பாசன அமைப்பை தங்கள் வயலில் அமைத்துக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு, அந்தந்தப் பகுதி வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் உள்ள வேளாண் உதவி இயக்குநர், தோட்டக்கலை உதவி இயக்குநர், கரும்பு அலுவலர்களை அணுகலாம். 04175-233354, 233337 என்ற எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார் அவர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

# கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதிரூ.25,000 கோடியைத் தாண்டும்

பிப்ரவரி 28,2012,04:38



சென்னை:நடப்பு நிதியாண்டில், நாட்டின் கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி, 15 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கும் வகையில், "இந்திய சர்வதேச கடல் உணவு பொருட்கள் கண்காட்சி 2012'க்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சென்னை வர்த்தக மையத்தில், வரும் 29ம் தேதி துவங்கும் இந்த கண்காட்சி, 3ம் தேதி வரை நடைபெறும்.

இதில், அமெரிக்கா, சீனா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த, 210 நிறுவனங்கள் பங்கேற்கின்றன. 1,100க்கும் மேற்பட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளில், நாட்டின் கடல் உணவு பொருட்கள் ஏற்றுமதி, 25 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டும் என, கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் தலைவர் லீனா நாயர் தெரிவித்தார்.

## பசுமை வீடுகள் திட்டம் : மயிலத்தில் கலந்தாய்வு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 28,2012,00:02 IST

மயிலம் :மயிலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சார்பில் கூட்டேரிப்பட்டில் பசுமை வீடு திட்டம் குறித்த கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

மயிலம் ஒன்றியத்திலுள்ள 47 ஊராட்சிகளில் பசுமை வீடு திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்ட 180 பயனாளிகள் கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கு நாகராஜ் எம்.எல்.ஏ., தலைமை தாங்கி பேசினார். ஒன்றிய சேர்மன் ராமமூர்த்தி முன்னிலை வகித்தார். பி.டி.ஓ., சதாசிவம் வரவேற்றார்.

மாவட்ட திட்ட அலுவலர் முத்துமீனாள், சூரிய விளக்கு வசதியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் குறித்து விளக்கிப் பேசினார்.

மாவட்ட ஊராட்சி செயலர் நீலாவதி, பி.டி.ஒ., கல்யாணசுந்தரி, துணை பி.டி.ஓ.,க்கள் சுப்ரமணி, நடராஜன், முழு சுகாதார வட்டார ஒருங்கிணைப்பாளர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கால்நடை தீவனத்தை சேமிக்க100 சத மானியத்தில் தீவனக்குழி

கோபிசெட்டிபாளையம்:கோடையில் கால்நடைகளுக்கு போதிய அளவு தீவனம் கிடைக்கும் வகையில், 100 சதவீத மானியத்தில், தீவனக் குழிகள் அமைக்கப்பட உள்ளன.

கோடையில் விவசாய நிலங்கள் தரிசாக இருப்பதால், கால்நடைகளுக்கு போதிய தீவனம் இல்லாத நிலை ஏற்படுகிறது. பருவ காலங்களில் செய்யப்படும் விவசாயம் மூலம் கிடைக்கும் வைக்கோல், கரும்பு தோகை, சோளத்தட்டு, நிலக்கடலை செடி போன்றவை கோடைகாலங்களில் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுகிறது. கரும்பு தோகை, சோளத்தட்டுகளை பதப்படுத்தி பாதுகாக்க, மத்திய வேளாண் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தீவனக் குழிகள் அமைக்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிகளவில் உள்ளது. ஒரு டன் கரும்பில், 150 கிலோ வரை தோகை கிடைக்க வாய்ப்புண்டு. இதை பதப்படுத்தி தீவனமாக மாற்றுவதன் மூலம் கோடை காலத்தில் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்த முடியும். கால்நடைகளும் அவற்றை விரும்பி உண்ணும்.

பதப்படுத்தப்படாத கரும்பு தோகையில் 1.86 சதவீத புரதமும், 44.73 சதவீதம் செரிமான சத்துகளும் உள்ளன. பதப்படுத்தப்பட்ட கரும்பு தோகையில் 5.81 புரதமும், 47.53 செரிமான சத்துகள் அதிகரிக்கிறது. ஒரு ஏக்கரில் கிடைக்கும் 7,000 கிலோ கரும்பு தோகையை கொண்டு தயாரிக்கப்படும் தீவனத்தை கொண்டு, ஒரு பசு மாட்டுக்கு நாள்தோறும், 15 கிலோ வீதம் கொடுத்தால் கூட ஆண்டு முழுவதும் பராமரிக்க முடியும்.

கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோபி கோட்டத்தில் தாளவாடி, டி.என். பாளையம், சத்தி, அம்மாபேட்டை, பவானிசாகர், நம்பியூர், பவானி, அந்தியூர், மற்றும் கோபி உள்பட ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களில், 12 இடங்களில் தீவன குழிகள் அமைக்கப்பட உள்ளது.
தீவனக்குழியில் ஒரு டன் தோகையுடன், 10 கிலோ உப்பு, 10 கிலோ யூரியா, 20 கிலோ சாக்கிரின் ஆகியவை சேர்த்து, காற்று புகாமல் பார்த்து கொள்ள வேண்டும். 45 நாட்கள் பதப்படுத்தினால், கோடை காலங்களில் கால்நடைகளுக்கு தேவையான தீவனம் கிடைக்கும். தீவனக் குழி அமைக்க மத்திய அரசு 100 சதவீத மானியம் வழங்குகிறது.

**பயிர் மகசூலை அதிகரிக்க தோட்டக்கலை திட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 27,2012,23:02 IST

கொடைக்கானல் :""தோட்டகலை பயிர் மகசூலை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன," என
தோட்டக்கலை உதவி இயக்குனர் கி÷ஷார் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: தோட்டக்கலைத்துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம், ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நடப்பாண்டில் துல்லிய பண்ணை அமைக்க கொடைக்கானலில் 20 எக்டேர் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, விவசாயிகள் குழு பதிவு செய்யப்பட்டுள்ளது.
குழுவினருக்கு மாதம் இருமுறை தொழில்நுட்ப ஆலோசனை கூட்டம் நடத்தப்படும். இடுபொருட்கள் மானியத்துடன் வழங்கப்படும். தோட்டகலைப்பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
பத்து ஏக்கருக்கு மேல், பயிர்சாகுபடி செய்யவிரும்புவோர், பசுமை கூடாரம் அமைத்து மலர் சாகுபடி செய்ய விரும்புவோர் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.